திருச்சி மாநகராட்சி உய்யங் கொண்டான் வாய்க்காலில் ராஜா காலனியில் ரூ.125 லட்சம் மதிப்பீட்டில் வாகனங்கள் செல்லும் வகையில் பொது நிதி 2024-25 திட்டத்தின் கீழ் கட்டப்படவுள்ள புதிய பாலம் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அடிக்கல் நாட்டினார். விழாவில் மாவட் கலெக்டர் பிரதீப் குமார், மேயர் அன்பழகன், ஆணையர் சரவணன், செயற்குழு உறுப்பினர் காஜாமலை விஜய், பகுதி செயலாளர் மோகன்தாஸ், மண்டல் குழுத் தலைவர் துர்காதேவி, கவுன்சிலர் புஷ்பராஜ், நகரப் பொறியாளர் சிவபாதம், நிர்வாகப் பொறியாளர் பாலசுப்ரமணியன், உதவி ஆணையர் சண்முகம், உதவி செயற் பொறியாளர் வேல்முருகன், வட்டச் செயலாளர் மூவேந்திரன், சிவா, குமுளித் தோப்பு மனோகரன், கவிதா, தினேஷ்குமார், நிர்வாகிகள் ஆகியோர் உள்ளனர்.

அமைச்சர்கள் இரா.இராஜேந்திரன், மா.சுப்பிரமணியன் ஆகியோர் சமுதாய அளவிலான புற்றுநோய் கண்டறியும் திட்டத்தின் விரிவாக்க காணொலிக் காட்சியினை சேலம் மாவட்டம், ஏற்காட்டில் நேற்று முன்தினம் (15.05.2025) வெளியிட்டார்கள். உடன்,துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் பி.செந்தில்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, , தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மருத்துவர் அருண் தம்புராஜ், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் .டி.எம்.செல்வகணபதி, கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சியகம் இயக்குநர் மரு.ஜே.சங்குமணி, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.ஜெ. ராஜமூர்த்தி, பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.டி.எஸ்.செல்வவிநாயகம் உள்ளிட்ட தொடர்புடைய மருத்துவத் துறையினர் கலந்து கொண்டனர்.

அரியலூர் மாவட்டத்தில் 'மக்களுடன் முதல்வர்' மூன்றாம் கட்ட சிறப்பு முகாமில்

2,204 பயனாளிகளுக்கு ரூ.12.96 கோடி மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள்!

அமைச்சர்கள் சா.சி.சிவசங்கர் - சி.வெ.கணேசன் வழங்கினர்!

அரியலூர், மே 17 - தமிழ்நாடு அரசு போக்கு வரத்து மற்றும் மின்சார த்துறை அமைச்சர் சா.சி.சிவ சங்கர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணே சன் அவர்கள் ஆகியோர் அரி யலூர் மாவட்டத்திற்குட்ப ட்ட வெண்மான்கொண் டான், கருப்பிலாக்கட் டளை, திருமானூர், அன்னி மங்கலம், கீழக்காவட் டாங்கு றிச்சி ஆகிய ஊராட் சிகளில் ஊராட்சிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் சிறப்பு முகா மினை தொடங்கி வைத்து, 2,204 பயனாளிகளுக்கு ரூ.12.96 கோடி மதிப்பிலான பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவி களை வழங்கினார்கள்.

மேலும் இன்றையதினம் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட முகாம்களில் காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரை யில் பொதுமக்களிடமிருந்து 1097 மனுக்கள் பெறப்பட்டு இணையதளத்தில் பதிவேற் றம் செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து மாலை 5 மணி வரையில் பொதுமக்களிடமி ருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, பதிவேற்றம் செய்யும் பணிகள் நடை பெற்று வருகிறது.

இந்நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத் தினசாமி, தலைமையில், அரி யலூர் சட்டமன்ற உறுப்பி னர் கு.சின்னப்பா முன்னி லையில் நடைபெற்றது.

மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட முகாமினை தொடங்கி வைத்து தமிழ் நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் பேசினார்.

இன்றையதினம் தா. பழூர் ஊராட்சி ஒன்றியம், வெண்மான்கொண்டான் ஊராட்சியில் நடைபெற்ற முகாமில் 457 பயனாளிக ளுக்கு ரூ.4,36,90,914, மதிப் பிலான அரசு நலத்திட்ட உதவிகளும், அரியலூர் ஊராட்சி ஒன்றியம், கருப்பி லாக்கட்டளை ஊராட்சி, கல்லக்குடி கிராமத்தில் நடைபெற்ற முகாமில் 446 ப யனாளிகளுக்கு ரூ.79,24,329 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், திரு மானூர் ஊராட்சி ஒன்றி யம், திருமானூர் ஊராட்சி யில் நடைபெற்ற முகாமில் 461 பயனாளிகளுக்கு ரூ.2,43,47,947 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், அன்னிமங்கலம் ஊராட்சி யில் நடைபெற்ற முகாமில் 419 பயனாளிகளுக்கு ரூ.2,04,74,706 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், கீழக்காவட்டாங்குறிச்சி ஊராட்சி, குந்தபுரம் கிரா மத்தில் நடைபெற்ற முகா மில் 421 பயனாளிகளுக்கு ரூ.3,31, 46,163 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும் என மொத்தம் 2,204 பயனாளிக ளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா, பட்டா பெயர் மாற்றம், திருமண உதவித் தொகை, தாட்கோ கல்வி உதவித்தொகை, புதிய நல வாரிய அடையாள அட்டை, தையல் இயந்திரங் கள், மாற்றுத்திறனாளிகளுக் கான மின்சார ஸ்கூட்டர் மற்றும் ஊன்றுகோல்கள், காதொலி கருவி கள், எல். பி.ஜி தேய்ப்பு பெட்டிகள், ஊட்டச்சத்து பெட்டகங் கள், விசை தெளிப்பான்கள், வேளான் விதைப்பொ ருட் கள், பழச்செடிகள் தொகுப் புகள், மருத்துவக் காப்பீட் டுத் திட்ட அட்டைகள், கலைஞர் கனவு இல்லம் பணிக்கான ஆணைகள், கல்வி உதவித்தொகைகள், வணிக மின் இணைப்பு, கட் டுமான பணி மின் இணைப்பு, மாட்டு கொட் டகை கடன், சுய உதவிக் குழுக்கடனுத விகள், பவர் டில்லர்கள் என பல்வேறு அரசுத் துறைத் திட்டங்க ளின் கீழ் ரூ.12,95,84,059 மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு அமைச்சர் பெரு மக்கள் சா.சி.சிவசங்கர், சி.வி.கணேசன் ஆகியோர் வழங்கினர்.

இம்முகாமில் நலத்திட்ட உதவிகள் கிடைக்கப்பெற்று பயன்பெற்ற மாற்றுத்திற னாளி திரு.விஸ்வநாதன் என்பவர் தெரிவிக்கையில் நான் கீழக்கொளத்தூர் கிரா மத்தில் வசித்து வருகிறேன். நான் சொந்தமாக பெட்டி கடை நடத்தி வருகிறேன். எனது பெட்டிக்கடைக்கு பொருட்கள் வாங்குவதற்கு பேருந்து மூலம் வெளியே செல்லும்போது மிகவும் சிர மமாக இருந்தது. இந்நிலை யில் இன்றைய மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் எனக்கு மாற்றுத்திறனாளிக ளுக்கான மூன்று சக்கர ஸ்கூட்டர் தமிழ்நாடு அர சால் வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக என்னால் எளிதாக பிற ஊர்களுக்கு சென்று எனது பெட்டிக் கடைக்கு தேவையான பொருட்களை வாங்கி கொள்வேன். எனக்கு மிக வும் மகிழ்ச்சியாக உள்ளது. இதற்காக தமிழ்நாடு அரசுக் கும், தமிழ்நாடு முதலமைச் சர் மு.க.ஸ்டாலின் அவர்க ளுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என விஸ்வநா தன் என்பவர் தெரிவித்தார்.

இதேபோன்று அரியலூர் மாவட்டம், சிறுவளூர் கிரா மத்தைச் சேர்ந்த மாற்றுத்தி றனாளி சுப்பிரமணியன் என் பவர் தெரிவிக்கையில், எனக்கு ஒரு கால் செயல்ப டாத நிலையில் உள்ளதால் நான் சொந்த வேலைக ளுக்கு வெளியில் செல்லும் போது மிகவும் சிரமமாக இருக்கும் அதன் காரணமாக எனக்கு மூன்று சக்கர ஸ்கூட் டர் வேண்டி விண்ணப்பம் அளித்திருந்தேன். அதனடிப் படையில் இன்றையதினம் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் முகாமில் எனக்கு மூன்று சக்கர ஸ்கூட்டர் வழங்கப்பட்டுள்ளது. இது எனக்கு மிகுந்த தன்னம்பிக் கையினை அளித்துள்ளது. இத்தகைய உதவியினை வழங்கிய தமிழ்நாடு அரசுக் கும், தமிழ்நாடு முதலமைச் சர் மு.க.ஸ்டாலின் அவர்க ளுக்கு நன்றி என சுப்பிரமணியன் என்பவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவ லர் க.ரா.மல்லிகா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர். ஆ.ரா.சிவராமன், வருவாய் கோட்டாட்சியர்கள் கோவி ந்தராஜ் (அரியலூர்), ஷீஜா (உடையார்பாளையம்), மாவட்ட துணை செயலா ளர்கள் சி.சந்திரசேகரன், லதாபாலு, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் இரா. கென்னடி, மா.அன்பழகன், அசோகசக்ரவர்த்தி, தன வேல், இரா.அண்ணாதுரை, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாள ர்கள் எ ஸ் . ஆ ர் . மு ரு கே சன் , செல்வ.பிரபாகரன், அருண், மாவட்ட நிலை அலுவலர் கள், அரசு அலுவலர்கள், பய னாளிகள், பொதுமக்கள், கழக தோழர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

மறைந்த மாவட்டக் கழக செயலாளர் பூண்டி கே.கலைச்செல்வன் அவர்களின் குடும்பத்திலிருந்து சட்டம் பயின்று வழக்கறிஞராகி இருக்கும், மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் மகன் பூண்டி. கே.கலைமுகுந்தனுக்கு திருவாரூர் மாவட்ட பத்திரிக்கையாளர்கள் வாழ்த்துக்கள் தெரிவித்தனர். நகரச் செயலாளர்கள் வாரை பிரகாஷ், பூண்டி.கே.கலைவேந்தன் உடன் இருந்தனர்.

நாகை மாவட்டம் நாகை நகர தி.மு.க. சார்பில் நாகையில் "நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் இது பல்லாண்டு" கழக அரசின் 4 ஆண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் பேசினார் உடன் தலைமைக் கழகப் பேச்சாளர் ஆரூர்ஜோதி, மாநில விவசாய அணி இணைச் செயலா ளர் ஆர்.அருள்செல்வம், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், துணைச் செயலாளர் ஆரூர். மணிவண்ணன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, இளம் பேச்சாளர் ராஅகிலா, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் இரா.முருகையன், மற்றும் நகரக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

ஈரோடு தெற்கு மாவட்டம் கருங்கல்பாளையம் பகுதி கழகத்தின் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் "நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் இது பல்லாண்டு", திராவிட மாடல் ஆட்சியின் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் பகுதி கழக செயலாளர் குறிஞ்சி என். தண்டபாணி தலைமையில் ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், சிறப்பு பேச்சாளர்கள் மு.கௌரி மனோகரன், கோவை இக்பால் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம், ரகு, மாமன்ற உறுப்பினர்கள் மேனகா நடேசன், கீதாஞ்சலி செந்தில்குமார், ம.தண்டபாணி கோரை பி.கணேசன் வட்ட கழக செயலாளர்கள் தங்கமணி, காமராஜ், ஜாபர் சாதிக், கே.டி.மகேஸ்வரன், ஜீவா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கழக துணைப் பொதுச் செயலாளர்

ஆ.இராசா எம்.பி. பங்கேற்கும் கழக நிர்வாகிகள் கூட்டம்!

17.5.2025	பகல் 12 மணி	- சென்னை தெற்கு மாவட்டம் சென்னை தென்மேற்கு மாவட்டம்
"	பகல் 2 மணி	- சென்னை கிழக்கு மாவட்டம்
19.5.2025	காலை 10 மணி	- சென்னை மேற்கு மாவட்டம்
"	மாலை 4 மணி	- சென்னை வடக்கு மாவட்டம்
20.5.2025	காலை 10 மணி	- சென்னை வடகிழக்கு மாவட்டம்
"	மாலை 4 மணி	- திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் - திருவள்ளூர் மத்திய மாவட்டம் - திருவள்ளூர் மேற்கு மாவட்டம்
21.5.2025	காலை 10 மணி	- காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்
"	மாலை 4 மணி	- காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்

திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண் 4ல் பொது நிதி 2024 25 ன் கீழ் ரூ.41.00 லட்சம் மதிப்பீட்டில் டீச்சர்ஸ் காலனி முதல் பழவஞ்சிபாளையம் பிரதான சாலை வழியாக விக்னேஷ்வரா நகர் பிரதான வடிகால் வரை புதிய மழை நீர் வடிகால் மற்றும் RCC சிறுபாலம் அமைக்கும் பணி, ரூ.34.00 லட்சம் மதிப்பீட்டில் குப்பாண்டம்பாளையம் நுண்ணுயிர் செயலாக்க மையம் முதல் ஜவகர் நகர் மெயின் ரோடு பிரதான வடிகால் வரை புதிய மழை நீர் வடிகால் அமைக்கும் பணியினை திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டல குழுத்தலைவர் இல.பத்மநாபன், மாநகராட்சி துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம் ஆகியோர் துவக்கி வைத்தனர். இதில் மாநகராட்சி சுகாதாரக்குழுத் தலைவர் கவிதா நேதாஜி கண்ணன், பகுதி கழக செயலாளர் கோவிந்தராஜ், வட்டக் கழக செயலாளர்கள் நேதாஜி கண்ணன், ரவீந்திரகுமார், வார்டு இளைஞர் அணி சதீஷ்குமார், அவைத்தலைவர் பாஸ்கர், பொருளாளர் கருப்பையா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

என்.எல்.சி. தொ.மு.ச. நிர்வாகிகள் தேர்தல்!

(பதிவு எண்.3463/SAT, பேரவை இணைப்பு எண்.75)

தொ.மு.ச.பேரவை அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் என்.எல்.சி. தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண்.3463/SAT, பேரவை இணைப்பு எண்.75) நிர்வாகிகள் தேர்தல் தொ.மு.ச. பேரவைச் செயலாளர் என்.தனசேகரன் அவர்களை ஆணையாளராகக் கொண்டு கீழ்க்கண்ட தேர்தல் கால அட்டவணைப்படி நடைபெறும்.

தேர்தல் கால அட்டவணை

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல்	- 19.5.2025 காலை 10.00 மணி
இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் (பகுதி வாரியாக	- 21.5.2025 காலை 10.30 மணி வரை
வேட்பு மனு படிவம் வழங்குதல்	- 22.5.2025 காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை
வேட்பு மனு தாக்கல்	- 23.5.2025 காலை 10.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை
வேட்பு மனு பரிசீலனை	- 24.5.2025 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 வரை
தகுதியுள்ள வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல்	- 25.5.2025 மதியம் 12 மணி
வேட்பு மனு திரும்பப் பெறுதல்	- 26.5.2025 காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை
இறுதி வேட்பாளர் பட்டியல்	- 27.5.2025 காலை 10.00 மணி
தேர்தல் வாக்குப் பதிவு	- 5.6.2025 காலை 5.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை

குறிப்பு: 1. வாக்குப் பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை தவிர இதர தேர்தல் நடைமுறைகள் அனைத்தும் சங்க அலுவலகத்தில் நடைபெறும்.

2. வாக்குப் பதிவு முடிந்தவுடன் வாக்குப் பெட்டிகள் வட்டம் -9ல் அமைந்துள்ள என்.எல்.சி. பள்ளிக்கு கொண்டு வரப்பட்டு இரவு 9.00 மணி முதல் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

15.5.2025
இடம்: கலைஞரகம்

மு.சண்முகம் எம்.பி.
பொதுச் செயலாளர்
தொ.மு.ச, பேரவை

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சி.எம்.இராமசாமி

மே 17 (1999)

இளம் வயதிலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, உறுப்பினராகி கழகப் பணியாற்றியவர்.

வடபெரும்பாக்கம் கிளைச் செயலாளராக மூன்று முறையும் – மாதவரம் ஒன்றிய துணைச் செயலாளராக இரண்டு முறையும் – மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர். குறிப்பாக, மிசா சட்டத்தை கண்டித்து, கறுப்புக் கொடி காட்டும் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.